ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கழக வெற்றி வேட்பாளராக போட்டியிடும் சிவ.வீ.மெய்யநாதன் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி குளவாய்ப்பட்டி ஆதி திராவிடர் பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி சின்னமான உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு வாக்குச் சேகரித்தார். நிகழ்வில் திருவரங்குளம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அரு.வடிவேல் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர். மாவட்டக் கழக செயலாளர். அமைச்சர் இரா. இராஜேந்திரன் கோட்டைப் பகுதி தி.மு.க வுக்கு உட்பட்ட 31 வது கோட்டத்தில் உதய சூரியன் சின்னத்திற்கு வீதி வீதியாகச் சென்று வாக்குகள் சேகரித்தார். உடன் கோட்டை பகுதி தி.மு.க. செயலாளர். இப்ராகீம் பகுதி கோட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தேர்தலுக்காக மக்களிடத்திலே பழனிசாமி நடித்துக்கொண்டிருக்கிறார்!

எதிர்க்கட்சிகளுடைய விமர்சனங்கள் எல்லாம் புஸ்வாணங்கள்!

புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை. ஏப். 9 -

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளரும்,' அமைச்சருமான எஸ்.ரகுபதி எந்த ஒரு ஆரவாரமும் இன்றி அமைதியான முறையில் திருமயம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வேட்பாளர் உட்பட ஐந்து பேருடன் சென்று திருமயம் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்..அப்போது வேட்பு மனு தாக்கல் செய்து வெளியே வந்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

தேர்தல் களம் எங்களுக்குப் பிரகாசமாக இருக்கிறது. ஐந்து ஆண்டுகாலத்திலே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியிலே தமிழ்நாடு பெற்றிருக்கிற நன்மைகளை பொதுமக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பது நாங்கள் சென்றிருக்கிற இடமெல்லாம் கிடைக்கின்ற வரவேற்பைப் பொறுத்து நன்றாக எங்களுக்குத் தெரிகிறது. இந்த ஆட்சியின் மீது எந்தவிதமான ஆன்டிஇன்கம்பன்சி கிடையாது. வெறுப்பு கிடையாத ஒரு ஆட்சி. எனவே வெறுப்பில்லாத ஆட்சி வெற்றி பெறுவது உறுதி என்பது நாடறிந்த உண்மை. எனவே அந்த வகையிலேயும் எங்களுடைய தலைவர் சாதனைகளும் நிச்சயமான வெற்றியை எங்களுக்குத் தரும்.

எதிர்க்கட்சிகளுடைய விமர்சனங்கள் எல்லாம் புஸ்வாணங்கள். அது எல்லா மக்களுக்கும் தெரியும். தேர்தலுக்காக வந்து மக்களிடத்திலே இன்றைக்கு அவர்கள் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறந்த நடிகர்கள். அந்த நடிகர்களுடைய நடிப்புத் திறமைக்கு வாழ்த்துகள்.

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அ.தி.மு.க. ஆட்சியிலதானே இறந்தார்? அப்ப யாரு முதலமைச்சர்? எடப்பாடி பழனிசாமி முதலமைச்சர். அப்ப அவருக்கு ஆளத் தெரியல. ஆளத் தெரிஞ்சிருந்தா அன்னைக்கே அதெல்லாம் சொல்லிருக்கலாம்ல? இன்றைக்கு வந்து ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு புத்தருக்கு ஞானோதயம் வந்தது போல இன்றைக்கு எடப்பாடிக்கு ஒரு ஞானோதயம் வந்திருக்கிறது. தலைவர் கலைஞரை வீட்டுச் சிறையிலே வைக்கக்கூடிய தைரியம் எந்த தமிழனுக்கும் கிடையாது, எந்த எதிர்க்கட்சிக்காரனுக்கும் கிடையாது. சிறைகளைக் கண்டு அஞ்சாத சிங்கம் தலைவர் கலைஞர் என்பதை பாளையங்

கோட்டை தனிச்சிறையிலே இருந்து இன்றைக்கு வெளியே வந்தவர் என்பது நாடறிந்த உண்மை. எனவே அவரை வந்து சிறையில வச்சாங்கன்னு சொல்றது போல எடப்பாடி பழனிசாமியைப் போல ஆளத் தெரியாத ஒரு முட்டாள் இந்த உலகத்தில் இருந்திருப்பதற்கான வாய்ப்பே கிடையாது. ஆட்சித்திறமை அற்றவர் என்பதை அவர் நிரூபித்திருக்கிறார்.

எனவே அவர் கையில தானே அன்னைக்கு போலீஸ் இலாக்கா எல்லாம் இருந்துச்சு? அப்படி இருந்தா உடனே அன்னைக்கே பப்ளிசிட்டி பண்ணிருக்கலாம்ல? அத்தனை பேரும் போய் கலைஞரைப் பார்த்து வருகிறார்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் பார்த்து வருகிறார்கள், டெல்லியிலிருந்து வருகிறவர்கள் பார்க்கிறார்கள். எல்லோரும் பார்க்கக்கூடிய தலைவராக கலைஞர் இருக்கிற பொழுது அவரை யார் வீட்டுச் சிறையிலே வைக்க முடியும்? வைக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இதெல்லாம் எடப்பாடி பழனிசாமி இன்றைக்கு தேர்தலுக்காகப் புளுகுற புளுகு. இதையெல்லாம் மக்கள் நம்ப மாட்டார்கள். ஆனால் அவரைப் பற்றி ஒன்று புரிந்து கொள்வார்கள், அவர் சொல்லுகிற பொய்யிலிருந்தே அவர் ஆளுகிற தன்மையை இழந்துவிட்டார். ஆட்சி அதிகாரம் அவர்களிடத்திலே போனால் டிவியில பார்த்துத் தெரிந்து கொண்டேன் என்று சொன்ன செய்திகளைப் போல இன்றைக்குச் செய்திகளை எல்லாம் அவர் பரப்புவார்.

பா.ஜ.க.வினரின் பிரச்சாரங்களை எல்லாம் எங்களாலே சுலபமாக எதிர்கொள்ள முடியும். அவங்க வந்து டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு என்ன செஞ்சிருக்காங்க? தமிழ்நாடு எவ்வளவு ரூபாய் பணம் வரிக் கட்டியிருக்கு? அதுக்கு எவ்வளவு திருப்பிக் கொடுத்தாங்கன்னு யாராவது சொல்ல முடியுமா? ஒரு ரூபாய் கொடுத்தா 29 பைசா திருப்பிக் கொடுத்து தமிழ்நாட்டுக்கு வர்றாங்க. உத்தரப் பிரதேசத்துக்கு ஒரு ரூபாய் கொடுத்தா ரெண்டே முக்கால் ரூபாய் கொடுக்கிறாங்க.

மத்தியப் பிரதேசத்துக்கு ஒரு ரூபாய் கொடுத்தா ஒன்றே முக்கால் ரூபாய் கொடுக்கிறாங்க. இப்படி பல மாநிலங்களுக்குக் கொடுப்பதை விட அதிகப்படுத்தி விட்டு நம்மிடமிருந்து ஒரு ரூபாயை வாங்கிக் கொண்டு 29 பைசா தந்து விட்டு இங்கே எந்த முகத்தோடு வருகிறார்கள் அவர்கள்? 50 பைசா தாங்கன்னு கேட்டா அதையே தர வக்கில்லாதவர்கள், அவர்கள் வந்து என்ன இங்கே கிழிக்கப் போறாங்க தமிழ்நாட்டுக்காக? நிச்சயமாக அவர்களாலே தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்ய முடியாது என்பது தமிழ்நாடு அறிந்த உண்மை.

இந்த தேர்தலில் 200 தொகுதிக்கு மேல் வெற்றியடைவோம்.

மக்கள் மத்தியில் மிகப் பிரமாதமான வரவேற்பு இருக்கிறது. அதைச் செல்லுகிற இடங்களிலெல்லாம் நாங்களும் பார்க்கிறோம், நீங்களும் பார்க்கிறீர்கள். மக்கள் இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கிறார்கள், திமுக அரசின் மீது எங்களுக்கு எந்தவிதமான வெறுப்பும் கிடையாது, அந்த அரசு எங்களுக்குப் பல்வேறு வகையிலும் உதவியாக இருந்திருக்கிறது. இன்றைக்குத் தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பணப்புழக்கம் அதிகரித்திருக்கிறது, அதனாலே பொருளாதாரம் உயர்ந்திருக்கிறது. அந்த உண்மையை மட்டும் ஏன் எதிர்க்கட்சிகள் எல்லாம் சொல்ல மறுக்கின்றன என்பதுதான் எங்களுக்குத் தெரியவில்லை. தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியை இன்றைக்கு உயர்த்திக் காண்பித்திருக்கிற அரசுதான் எங்களுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு. எங்களுக்கு எல்லாருமே களத்துல ஒன்னுதான். ஆனா நாங்க நம்பர் ஒன்.

நான் வந்து என்னுடைய இதுல வந்து அரசின் சார்பிலே என்னென்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்வேன் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். எங்களுடைய சொந்த நிதியிலிருந்து மாணவ மாணவிகளுடைய கல்விக்காக ஆண்டுக்கு 25 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் ஒரு மாணவனுக்கு நாங்கள் கொடுப்போம், ஒரு கோடி ரூபாய் எங்களுடைய கல்வி அறக்கட்டளையிலிருந்து கொடுப்போம்னு சொல்லிருக்கேன். அதேபோல கழகத் தோழர்கள், அதேபோல கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்கள்,

இவர்களுடைய திருமண உதவியாக 25 ஆயிரம் ரூபாய் குறைந்தபட்சம் ஒரு 100லிருந்து 200 குடும்பங்களுக்கு ஆண்டுதோறும் கொடுப்போம் என்று சொல்லியிருக்கின்றேன். அதேபோல முதியோர் இல்லம் கட்டித் தருவோம், மாணவியர் விடுதி கட்டித் தருவோம் போன்ற வாக்குறுதிகள் எல்லாம் தந்திருக்கின்றேன். எங்களுடைய மருத்துவ... எங்களுடைய மருத்துவ ஆம்பு லன்ஸ், அதாவது மருத்துவச் சேவை இப்போது தொடர்ந்து நடைபெற்றது. இப்ப தேர்தலுக்காக நடத்தல. அதுல ஒரு டாக்டர், ரெண்டு நர்ஸ் போட்டு கிராமம் தோறும் வருஷத்துல 365 நாளும் அவங்க போய் ஏழை எளிய மக்களுக்குத் தேவையான வைத்திய உதவிகளைச் செய்து தருவார்கள். தேவைப்படுகிற வைத்திய உதவிகளை இலவசமாக எங்களுடைய மருத்துவமனையில் யார் வந்தாலும் திருமயம் தொகுதி மக்களுக்குச் செய்து கொடுப்போம்.

நாங்க 200 சீட்ல ஜெயிக்கப் போறோம். எங்களுடைய கூட்டணிக்குக் கொடுத்திருக்கிற சீட்டு உங்களுக்குத் தெரியும். நாங்க 175 இடத்துல உதய சூரியன் சின்னத்துல போட்டியிடுறோம்.

தொகுதிக்குக் கலை அறிவியல் கல்லூரி கொண்டு வந்திருக்கேன், அதுதான் முக்கியம். ஏழை எளிய மாணவர்கள் படித்து அவர்கள் உயர்கல்வி படிப்பதற்கு வசதியானது கலை அறிவியல் கல்லூரி, அதை திருமயத்துக்கு முதல்ல கொண்டு வந்திருக்கோம். அதுதான் முக்கியம். அதைக் கொண்டு வந்திருக்கிறதைப் பாராட்டுங்க. ஏன்னா மற்ற விராலிமலைத் தொகுதில 10 வருஷம் அமைச்சரா இருந்தவர் அங்கே ஒரு கலை அறிவியல் கல்லூரி கொண்டு வரவில்லை. நாங்கள் உடனடியாக கலை அறிவியல் கல்லூரியைக் கொண்டு வந்திருக்கோம். தொடர்ந்து மற்ற கல்லூரிகளைக் கொண்டு வர முயற்சிப்போம்.

வதந்திகளுக்கோ, கற்பனைகளுக்கோ பதில் சொல்ல முடியாது. திருமாவளவன் வந்து எங்களைப் பொறுத்தவரை எங்களுடைய நேர்மையான நண்பர். அவர் நிச்சயமாக மனசுல என்ன இருக்கோ அதைச் சொல்லக்கூடியவரே தவிர வதந்திகளுக்கெல்லாம் அவர் இடம் கொடுக்க மாட்டார் என்று தெரிவித்தார்.

கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

மயிலம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கலந்து கொள்ளும் தேர்தல் தொடர்பான அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (09.04.2026 - வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு, மயிலம் வடக்கு ஒன்றியம், தீவனூரில் உள்ள ஜி.ஜெ.திருமண மண்டபத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில், மயிலம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் டாக்டர் மாசிலாமணி முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

கூட்டத்தில் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, நிர்வாகிகள் ஒன்றியகழக செயலாளர்கள் தேர்தல் பணி குழு நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி கே.எஸ்.மஸ்தான்
எம்.எல்.ஏ.,
பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

பல்லடம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர், மத்திய மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் பொங்கலூர் ஒன்றியம், புதுப்பாளையம், ஆண்டிபாளையம், வேலம்பட்டி, உகயனூர், குப்பிச்சிபாளையம், பொல்லிகாளிபாளையம் பண்ணை கிணத்துபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

விராலிமலை சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

கே.கே.செல்லப்பாண்டியன்- — ஜோதிமணி எம்.பி. சிறப்புரை!

புதுக்கோட்டை, ஏப். 9 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஒன்றியங்கள் சார்பில் விராலிமலை சட்டமன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் இலுப்பூரில் கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் பி.டி. அரசக்குமார் தலைமையில் நடைபெற்றது. அன்னவாசல் கிழக்கு ஒன்றியச் செயலாளர் தென்னலூர் எம். பழனியப்பன் அனைவரையும் வரவேற்றார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் , விராலிமலை தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கே.கே.செல்லப்பாண்டியன் , கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி வாக்குகள் கேட்டு சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்வில் கழக விவசாய அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன்,, பெட்ர்ட் அந்தோணிராஜ் (காங்), முகம்மது அஸ்ரப் அலி (முஸ்லிம் லீக்), புவனேஸ்வரி (விசிக), சண்முகம் (கம்யூனிஸ்ட்), கார்த்திகேயன் (தே.மு.தி.க.), தர்மராஜ் (தமிழ் தேசம்). கழக ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, கோவிந்தராஜன், மு.பி.ம.சத்திய சீலன், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், பேரூர் கழக செயலாளர்கள் வை.விஜயக்குமார், முகம்மது ரிஷா, பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில் குமார், முன்னாள் நகர்மன்றத் தலைவர் ராஜசேகரன், வழக்கறிஞர் திருநான் சம்பந்தம், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், டாக்டர் கே.என்.அமானுல்லா, மஜீத் முபாரக், பிரபா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, ராயல் சபா, டி.செல்வம், வழக்கறிஞர் எம்.பாலமுருகன், சாங்கிராப்பட்டி ரவி,

மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். முடியில் விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ் நன்றி கூறினார்.

திருவையாறு சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. பூதலூர் தெற்கு ஒன்றிய பகுதிகளில் ஜல்லிக்கட்டு காளையுடன் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் பூதலூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் சு.முருகானந்தம் பொன்.க.லெலின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராயபுரம் புலவர் கி.தியாகராசன்
ஏப்ரல் 9 (2000)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலம் தொட்டு, பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களுடன் திராவிடர் இயக்கத்தில் இணைந்து பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மானத் தொண்டராய் – பேரறிஞர் அண்ணாவின் பேரன்பையும் – தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் பெற்றவர்.

தந்தை பெரியாரின் இல்லத்தில் தங்கி, 'குடியரசு' நாளிதழில் பணியாற்றியதோடு, கழகத்தின் "நம் நாடு" ஏட்டின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி இயக்கத் தொண்டாற்றியவர்.

இராயபுரம் பகுதியில் கழகம் வளர்ந்திட இயக்கத் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.